## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No. 130/2015

2025 -ம் ஆண்டு ஜூலை மாதம் 07 -ம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியின் பி.சா.1 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. V. பாண்டியன், Bench Clerk (Gr-III) - I/C அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 07.07.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. சண்முகம் (DW-1) | வயது | : | 70/2025 |
| க/த பெயர் | : | திரு. பக்கிரிசாமி | தொழில் | : | விவசாயம் |
| முகவரி | | மன்னார்குடி | வட்டம் | : | மன்னார்குடி |

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

சத்தியநாராயணன் தான் வழக்கின் தரப்பினர், நான் அவரது முகவர் என்றால் சரிதான். எந்த தேதியில் பவர் பத்திரம் எழுதி கொடுத்தார் என்றால் 2010 ல் எழுதி கொடுத்தார். சத்தியநாராயணன் எனது மகன் என்றால் சரிதான். தற்பொழுது எங்கு வேலை பார்க்கிறார் என்றால் சென்னை ஐ.டி. கம்பெனியில் வேலை பார்க்கிறார். வாதி தாக்கல் செய்த இவ்வழக்கின் வழக்குரையை படித்து பார்த்துள்ளார் என்றால் படித்து பார்த்தேன். வா.சா.ஆ.4 ஆவணத்தை வழக்குரையுடன் வாதிகள் தாக்கல் செய்தபோது அந்த ஆவணத்தை மறுத்து எனது எதிர்வழக்குரையிலோ கூடுதல் எதிர்வழக்குரையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.4 ஆவணம் செல்லாது, என்னை கட்டுப்படுத்தாது என்று கூறி எந்த நீதிமன்றத்திலும் சத்தியநாராயணன் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

தாவா சொத்தினை எனது மகன் கிரயம் வாங்கியதாக கட்சி செய்திருந்தால் அந்த கிரய ஆவணம் அசல் தற்பொழுது யாரிடம் உள்ளது என்றால் ஸ்ரீராம் சிட்பண்ட்சில் அடமானத்தில் உள்ளது. அந்த கிரய ஆவணத்தின் சான்றிட்ட நகலை இந்நீதமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான்

தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ.1 ஆவணமானது கமலா என்பவருக்கு குத்புதீனுக்கு கிரயம் செய்து கொடுத்த ஆவணம் என்றால் சரிதான். பி.சா.ஆ.1 ல் ஆவணத்தின் அடிப்படையில் கமலாவை 1997 ல் தாவா சொத்தினை கிரயம் வாங்கியதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

சத்தியநாராயணன் கிரயம் வாங்கியதற்கான எந்த ஆவணத்தையும் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பி.சா.ஆ.4 ஆவணமானது தமிழரசி என்பவர் கிம்ராஜ்மாலி என்பவருக்கு எழுதி கொடுத்தது என்றால் சரிதான். பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.4 ஆவணங்களில் சொல்லப்பட்டுள்ள சர்வே எண்.3097, கதவிலக்கம் 16 பி மற்றும் 16 பி1 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

பி.சா.ஆ.1 ஆவணத்தின் டி.எஸ்.நெ.3097 ல் கிரயம் வாங்கிய விஸ்தீரணம் 598 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.1 ஆவணமும், பி.சா.ஆ.4 ஆவணத்தின் உள்ள சொத்தும் ஒரே சொத்து, பி.சா.ஆ.1 ஆவணத்தை கொண்டுதான் பி.சா.ஆ.4 ஆவணம் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரிதான். கதவு எண்.16 பி ஐ பொறுத்த வரை எங்களுக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரிதான். டி.எஸ்.நெ.3097 ல் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 2400 சதுரடி தோராயமாக இருக்கும்.

2400 சதுரடி கிரயம் வாங்கியதற்கான எந்தவித ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.3 ஆவணமான வில்லங்க சான்றிதழ் எந்த ஆண்டிலிருந்து எந்த ஆண்டு வரை எடுக்கப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. சர்வே எண்.3097 மற்றும் இதர சொத்துக்களை பொறுத்து சிவசுப்பிரமணியம் என்பவர் தனது மகனான சிவக்குமாருக்கு செட்டில்மெண்ட் மூலம் சொத்தினை எழுதி கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். இந்த செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது என்று எந்த நீதிமன்றத்திலும் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

சர்வே எண்.3097 உள்ள சொத்துக்கள் பொறுத்து 1955 ல் இருந்து வழக்கு தாக்கல் செய்த நாள் வரை வில்லங்க சான்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது மகன் சத்தியநாராயணனுக்கு கிரயம் கொடுத்த குத்புதீனுக்கு எதன்

அடிப்படையில் தாவா சொத்து கிடைத்தது என்றால் குத்புதீனின் அப்பா உயில் எழுதியதன் மூலம் கிடைத்தது. எந்த வருடம் அந்த உயில் எழுதப்பட்டது என்றால் 1996 ல் எழுதப்பட்டது. பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த உயில் ஆவணத்தின் நகலை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

குத்புதீன் சகோதரருக்கு இடையே பாகப்பிரிவினை வேண்டி அசல் வழக்கு எண்.145/2009 நடந்து முடிந்ததாக எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளதால் அதற்கான ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் செய்துள்ளேன். இந்த வழக்க சம்மந்தமாக மேல்முறையீடு மன்னார்குடி சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. மன்னார்குடி சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள மேல்முறையீடு மனு தீர்வு காணப்பட்டால்தான் தாவா சொத்தை குறித்து எனக்குள்ள உரிமை தெரிய வரும் என்றால் சரிதான்.

இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.227/2007 ல் குத்புதீன் என்பவரால் வாதியின் தகப்பனார் சிவக்குமார் என்பவருக்கும், தமிழ்நாடு மின்சார வாரியத்துக்கும் எதிராக உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி போடப்பட்ட வழக்கு என்றால் சரிதான். சொத்தின் உரிமை குறித்து அந்த வழக்கில் தீர்மானிக்கவில்லை என்றால் சரிதான். இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.145/2009 வழக்கில் வாதிகள் தரப்பினர் இல்லை என்றால் சரிதான்.

குத்புதீன் என்பவரின் பவர் ஏஜெண்ட் நான்தான் என்றால் சரிதான். எனது மகன் சத்தியநாராயணனுக்கும் நான்தான் பவர் ஏஜெண்ட் என்றால் சரிதான். வேறு யார்யாருக்கு பவர் ஏஜெண்டாக நான் இருக்கிறேன் என்றால் வேறு யாருக்கும் இல்லை. 2 ம் வாதி சிவக்குமார் மீது மன்னார்குடி சார்பு நீதிமன்றத்தில் கடனுறுதிச் சீட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரிதான். தாவா சொத்து சம்பந்தமான விபரங்கள் அனைத்தும் எனக்கு நன்கு தெரியும் என்றும், அதனால் குத்புதீனை கொண்டு உயில் ஏற்படுத்திக்கொண்டு தாவா சொத்தினை குத்புதீன் மூலம் எனது மகனுக்கு கிரய பத்திரம் எழுதி கொடுத்தேன் என்றால் சரியல்ல.

தாவா சொத்தானது எனது மகனால் 09.04.2008 ல் குத்புதீனிடமிருந்து கிரயம் பெற்ற ஆவணம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வில்லங்கம் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் ஸ்ரீராம் சிட்பண்ட்சில் அடமானம் வைத்து பணம் பெற்றுக்கொண்டு சரிவர பணம் செலுத்தவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.3097 ல் உள்ள விஸ்தீரணம் வாதிக்கு 1955 ம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட ஆவணத்தின் அடிப்படையிலும், 2015 ல் வாதியின் தகப்பனார் சிவசுப்பிரமணியம் எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையிலும் வாதிக்குதான் சொந்தம் என்றால் சரியல்ல.

எனது மகன் ஸ்ரீராம் சிட்பண்ட்சில் எழுதிக்கொடுத்த அடமான பத்திரம் வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. இதுநாள் வரை டி.எஸ்.நெ.3097 ல் உள்ள சொத்துக்கு இந்நாள் வரை வாதிதான் வரி செலுத்தி வருகிறார், நான் செலுத்தவில்லை என்பதால்தான் நான் வரி செலுத்தியதற்கான ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை பிரதிவாதிக்குதான் பாத்தியப்பட்ட சொத்து என்று எதிர்பாத்தியம் கோரி வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்து குத்புதீனும், நானும் சேர்ந்து ஏற்படுத்திய எந்தவித ஆவணமும் வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2025.07.15 12:48:33 +0530

District Munsif

Mannargudi.